# ‘அறுபடை வீடே’ ஆதங்கம் கொள்கிறது!

மதுரையில் இந்து முன்னணி நடத்திய மாநாடு போலி முகாந்திரம் கொண்டது என்பதை தமிழ்நாட்டு மக்கள் முழுமையாக உணர்ந்து விட்டனர்.

மாநாட்டில் நடைபெற்ற பக்தி மார்க்க மூலதனத்தை பா.ஜ.க. மற்றும் அதன் தோழமைக் கட்சிகள் அரசியல் ஆதாயம் பெற்றிட நடத்தப்பட்ட நாடகமாக அனைவராலும் உணரமுடிகிறது. மொத்தத்தில் அவர்களின் குள்ளநரி தந்திர முயற்சி மாநாடு தோல்வியடைந்தது.

தமிழ்நாட்டின் அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற குள்ளநரியின் குணத்தையே காலமெல்லாம் தமதாக்கிக் கொண்டு மதவெறியை மக்கள் மனதில் திணித்து ஆதாயம் தேடும் சுயநல மதவாத ஆர்.எஸ்.எஸ்.ஸின் முயற்சிக்கு தமிழ்நாடு ஒரு நாளும் இரையாகாது.

தமிழ்க் கடவுள் முருகனை தங்களுக்கு சாதகமாக மதவெறி பிடித்த கும்பல் பயன்படுத்திக் கொள்ள துடிக்கிறது.

தேசப்பற்று தனக்கு மட்டுந்தான் சொந்தம் என்று இந்திய மக்களை நம்ப வைத்து விட வேண்டுமென்று பா.ஜ.க துடியாய் துடித்தாலும் அதை மக்கள் ஏற்க தயாராக இல்லை.

தமிழ்நாட்டின் மீது பா.ஜ.க. அரசியல் போரை மக்கள் மீது அழுத்தமாக முன் வைத்திருக்கிறது.

**“ஜனநாயக ரீதியாக எதிர் கொண்டு திராவிட மாடல் அரசு வெல்லும்”**

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியை இந்தியாவிலேயே சிறப்பாக நடத்தி வரும் மாண்புமிகு **முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்களின் திராவிட மாடல் கொள்கை இந்தியா முழுக்க பெரும் ஆதரவு பெற்று வருகிறது.

இதைக் கண்டு பயம் கொண்டுள்ள ஆர்.எஸ்.எஸ். மூளையை பா.ஜ.க. வாயிலாக தி.மு.க. வை எப்படியாவது தோற்கடித்து விட வேண்டும் என்கின்ற சங்கிகளின் பல ஆண்டுகால இன விரோத கனவை நிறைவேற்றிக் கொள்ள பகீரத முயற்சியைக் கையாளுகிறது.

இன விரோதத்திற்கு துணைபோகும், ஆரியர்களைத் துதிக்கும் தமிழ்நாட்டு சங்கிகளின் ஆதரவாளர்கள் நம் மொழியை மறந்து நம் இனத்தை மறந்து, நம் உரிமையை இழந்து, அடிமைகளாய் வாழ்ந்து, எதிர்கால சந்ததிகள்… நமது மொழி, கலாச்சாரம், தன்மானம், சுயமரி யாதை அனைத்தையும் இழந்து விட்ட பிறகு இவர்கள் சிந்திப்பார்களே யானால், கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் என்பது தானே மிச்சம்.

**நாகை.சந்திரபாபு**
பொருளாளர், தலைமை கழக இலக்கிய அணி, தி.மு.க.



தமிழ்மொழி உணர்வாளர்கள் தமிழ் இனத்தைப் பற்றி அக்கறையுடன் சிந்திப்பார்களேயானால் உலக அளவில் வாழும் மக்களில் தமிழ் இனம் எத்தனை விழுக்காடு ? என்பதை சிந்திக்க வேண்டும்.

உலக மக்கள் தொகையில் நாம் மிக, மிக சிறுபான்மையினரே! ஆய்வு செய்தால் நாம் ஓர் இலக்க விழுக்காடுதான் என்பதை அறிய வரும்.

உலகம் முழுக்க தமிழர்கள் வாழ்ந்தாலும், தமிழர்களின் தலைமையகம் தமிழ்நாடு தான் என்பதையும் நாம் பொறுப்போடு உணர வேண்டும்.

சமூகநீதியை நிலை நாட்ட சபதமேற்றிருக்கும் அனைத்து இயக்கங்களும் மதவெறியை வேரோடும், வேரடி மண்ணோடும் ஒழிக்க ஒன்று கூடி பா.ஜ.க.வை தோற்கடிக்கும்.

நம் தமிழினத்தையும், தமிழ் கலாச்சாரத்தையும், தமிழ் பண்பாட்டையும், தன் மானத்தையும், சுயமரியாதையையும் நிலை நிறுத்தி, தமிழ்நாட்டை வளப்படுத்த, தமிழ் மொழியை வலுப்படுத்த வேண்டியவர்களாக இருக்க வேண்டியவர்கள், தங்களது சுயநலத்தை வளப்படுத்த, போலி அடையாளத்தை உருவாக்கி கொண்டு சமூகநீதியை நிலை நாட்டத் தவறிய, பொறுப்பற்ற தலைவர்கள் தமிழ்நாட்டை சீரழித்துக் கொண்டிருப்பதை பொது வாழ்க்கையில் தங்களை ஈடுபடுத்தி கொண்டுள்ள யாரும் ஏற்க மாட்டார்கள்.

மதுரை பக்தர்கள் மாநாட்டில் 6 தீர்மானங் களை நிறைவேற்றியிருக்கின்றனர்.

2 தீர்மானங்கள் : பக்திக்கு சம்பந்தம் இல்லாதவை?…

(1) பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி கொடுத்த மோடிக்கு பாராட்டு.

(2) ஒவ்வொரு தேர்தலிலும் இந்துக்கள் ஒற்றுமையாக இருந்து இந்துக்களின் ஓட்டு வங்கியை நிரூபிக்க வேண்டும்.

இவையிரண்டும் பா.ஜ.கட்சி மாநாட்டில் வைக்க வேண்டிய தீர்மானங்கள். பக்தி மாநாட்டிற்கும், ஆன்மீகத்திற்கும் தொடர்பற்றது. அறுபடை வீடே ஆதங்கம் கொள்கிறது.

இது நமது கேள்வியல்ல. அங்கே கூடியிருந்த முருகப் பக்தர்களின் வேதனை முணுமுணுப்பு. 2014ல் ஏழை மக்கள் ஒவ்வொருவருடைய வங்கி கணக்கிலும் ரூ.15 இலட்சம் பா.ஜ.க அரசால் வரவு வைக்கப்படும் என்று உறுதியளித்து மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்தவர்கள்…!

2019ல் தேர்தலுக்கு இரு வாரங்களுக்கு முன்பு தேசவிரோத செயலாக புல்வாமா தாக்குதலை செயற்கையாக ஏற்படுத்தி, இந்திய மக்கள் அனைவருக்கும் தேசப்பற்றை உருவாக்கி, வாக்கு வங்கியை தேர்தலுக்காக தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டு ஆட்சியைப் பிடித்தவர்கள்.

2024ல் மக்கள் செல்வாக்கு இழந்ததை அறிந்து இராமர் கோயில் கட்டியதன் மூலம் ஆன்மீக அரசியல் ஆதாயம் தேட மூன்றாவது முறையாக ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்று குள்ள நரித்தனத்தை கையாண்டதின் மூலம் தேர்தலில் தில்லு முல்லு செய்தும் கூட, தனி மெஜாரிட்டியோடு பா.ஜ.க. வால் ஆட்சியமைக்க முடியவில்லை. போலித்தனமாக மோடி அவர்கள் ராஜினாமா செய்து விடுவதாகவும், அறிவிப்பு செய்தார்.

சந்திரபாபு நாயுடுவையும், நிதீஷ்குமார் அவர்களையும் கை, கால்களை பிடித்து தொடர்ந்து பிரதமர் பதவியை தக்க வைத்துக் கொண்ட பா.ஜ.க. இராமர் கோயில் யுக்தியால் தோற்றுப் போனது என்பதை நாடறியும்.

மோடியை ‘குழந்தை இராமர்’ காப்பாற்றினாரா? அல்லது சந்திரபாபு நாயுடு காப்பாற்றினாரா? தமிழ்நாட்டில் முருகனைப் பிடித்து அரசியல் ஆதாயம் தேட முயற்சிப்பது, மோடிக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தும். நமது தமிழ் மண்ணில் தொடர் தோல்வியடையும் பா.ஜ.க.

**‘பராசக்தி’** படத்தில், கலைஞரின் வசனத்தில் **“கோயில்கள் கூடாது என்பதல்ல. அது கொடியவர்களின் கூடாரமாக மாறி விடக் கூடாது”** என்று அவர் எழுதியிருப்பார். இதற்கு கிடைத்த மாபெரும் வரவேற்புதான், எக்காலமும் **“திராவிட மாடல் ஆட்சி”** தான் தமிழ்நாட்டை வழி நடத்தும். பா.ஜ.க. முருகன் பக்தி மாநாட்டு தீர்மானத்தில் தமிழகத்திலுள்ள கோயில்களிலிருந்து **‘இந்து சமய அறநிலையத் துறையையே’** வெளியேற்ற வேண்டும் என்கின்றனர்.

இப்போது புரிகிறதல்லவா? இது பக்தி மாநாடா? ஆர்.எஸ்.எஸ். மாநாடா?

“அறநிலையத்துறையையே அகற்ற வேண்டுமாம்…! ஆலயங்களை ஆரியர்கள் ஆள வேண்டுமாம். இதை ஒரு முருகப் பக்தனாவது வரவேற்பானா? தமிழ்நாட்டில் உங்கள் ஜம்பம் எக்காலமும் பலிக்காது.

இந்து முன்னணி பொருளாளர் எனும் நபர், “முதல் சங்கி முருகக் கடவுள்” தான் என்கிறார். திருவள்ளுவருக்கு சாயம் பூச முயற்சித்தது போல், முருகனுக்கு ஆரியன் எனும் சாயம் பூச முயற்சிக்கும் இந்த கும்பல், தோல்வியைத் தழுவும்.

மூட நம்பிக்கையைத் திணிப்பவன் சங்கி.. மூட நம்பிக்கையில் மூழ்குபவனும் சங்கி தான்.

காவல்துறை அதிகாரியாக பணியாற்றி, ஒரு கட்சிக்கும் தலைவராகி தலைவர் பதவி இழந்த பின்பும், தன்னை தலைவராகவே கருதிக் கொண்டு, பித்தம் பிடித்தவர் போல பக்தி மாநாட்டில் கக்கியிருக்கும் சொற்கள்…

தான் பேசியதை ஆடுமலை (அண்ணாமலை) செய்தித் தாளில் படித்தால், அவரே வைத்தியம் பெற வேண்டியவராவார்.

குமரியார் மகள் தமிழிசை… கூறும்போது “இந்துக்களுக்கு வாழ்த்து சொல்லாதவர்கள் மக்களின் வாழ்த்துகளை பெற முடியாது” என கூறுகிறார். ‘சகோதரி’ என நாம் ஏற்று அவருக்கு சொல்லும் பதில். நாங்கள் வணக்கங்கள் சொல்லி, மக்களின் வாழ்த்துகளைப் பெறுபவர்கள். 2026லும் இதை உணர்வார் தமிழிசை!.

பக்தி மாநாட்டிற்கு முட்டுக் கொடுத்துள்ளார் பழநிச்சாமி.

அந்த மாநாட்டிற்கு வாழ்த்தும் தெரிவித்திருக்கிறார். அ.தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் நான்கைந்து பேர்களை அனுப்பி பங்கேற்க வைத்துள்ளார். அதிலொரு அமைச்சர் “பா.ஜ.க. மாநாட்டு தீர்மானங்களை அ.தி.மு.க. ஏற்காது” என்றார்.

அறிஞர் அண்ணாவின் பெயரால் உருவாக்கப்பட்ட கட்சிக்கு பொதுச் செயலாளராக இருக்கக்கூடிய எடப்பாடி “என்ன தன்னிலை விளக்கம் தர போகிறார்?” அ.தி.மு.க. மதவாத கட்சி என்பது போல, வழி நடத்துகிறார் என்ற சந்தேகத்தை அ.தி.மு.க. மக்களுக்கு தெளிவாக்க வேண்டும்.

அறிஞர் அண்ணாவின் “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்ற கொள்கையை நான் இதுவரை கேள்விப்பட்டதில்லை என எடப்பாடி கூறுவாரா ?

தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டினை தொலைக்காட்சியில் பார்த்து தெரிந்து கொண்டது போல இனிமேல் தான் “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்ற அறிஞர் அண்ணாவின் கொள்கையை படித்து அறிய வேண்டுமென்பாரோ?

## கடலூர் மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் "ஓரணியில் தமிழ்நாடு" –

# உறுப்பினர் சேர்க்கை முகாம் குறித்து ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை!



கழக தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கடலூர் மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் "ஓரணியில் தமிழ்நாடு" - உறுப்பினர் சேர்க்கை முகாம் குறித்து ஆலோசனைக் கூட்டம் இன்று (28.06.2025-சனிக்கிழமை) கீழ்கண்ட இடங்களில் நடைபெறுகிறது.

முகாமில் படிவத்தில் நிரப்பப்படும் விவரங்களை பிரத்தியேகமாக செயலியில் (App) உள்ளீடு செய்யப்படவேண்டியது குறித்து கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி ஆகிய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் வாக்குச்சாவடி வாரியாக பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA), பாகநிலை முகவர்கள் பயிற்சி பாசறைக் கூட்டம், கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர்- அமைச்சர் சி.வெ. கணேசன் எனது தலைமையில் தொகுதி பார்வையாளர்கள் முன்னிலையில் கீழ்க்கண்ட விவரபடி நடைபெறுகின்றது.

1.காலை- 10 மணி திட்டக்குடி சட்ட மன்ற தொகுதி இராமலிங்கம் அஞ்சுகம் திருமண மண்டபம். திட்டக்குடி.

2. காலை:- 11. மணி விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதி சிவபூஜா திருமண மண்டபம் விருத்தாசலம்.

3. மாலை;- 3 மணி நெய்வேலி சட்ட மன்ற தொகுதி கே.என்.டி. மஹால் ஆர்ச் கேட் எதிரில் நெய்வேலி.

4. மாலை:- 4 மணி பண்ருட்டி சட்ட மன்ற தொகுதி - கே.எஸ்.ஆர்.சக்கரபாணி திருமண மண்டபம் பண்ருட்டி.

குறிப்பு:- BDA பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**சி.வி.கணேசன்**
செயலாளர்
கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

## சைதை மேற்குப் பகுதி 139 (அ) வட்டச் செயலாளர்

# சை.மு.சேகர் இல்ல விழா! டி.ஆர்.பாலு - மா.சுப்பிரமணியன் வாழ்த்து!

## தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. - துணை மேயர் மு.மகேஷ்குமார் - முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை,ஜூன்.28-

சைதை மேற்கு பகுதி 139 வது அ வட்டச்செயலாளர். சை. மு. சேகர் பேத்தி சஷ்மிதா பூப்புனித நீராட்டு விழா நாளை (29.06.2025. ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணியளவில். லட்சுமி ஹால். 100அடி சாலை, அசோக்நகர், சென்னை.83 நடைபெறுகிறது.

தலைமை: சை. மு. சேகர். எம். ஏ வட்டச்செயலாளர் முன்னிலை: எம்.கிருஷ்ணமூர்த்தி சைதை மேற்கு பகுதி செயலாளர். 10வது மண்டலக்குழுத் தலைவர் வழக்கறிஞர். எம். ஸ்ரீதரன். எம்.சி. சைதை.மா.அன்பரசன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் . எம். எஸ். ஹரிபாபு. களக்காடி. எல்லப்பன்,

வரவேற்புரை: டி.என். சிவமணி, இ.வரதன், மா. ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், சுமதி தீனதயாளன், பூபதி. வெங்கடேசன்

வாழ்த்துபவர்கள்: முன்னாள் மத்திய அமைச்சர். கழக பொருளாளர்.டி. ஆர். பாலு. எம்.பி, மாவட்ட செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன். தென்சென்னை பாராளுமன்ற உறுப்பினர் மு. மகேஷ்குமார், துணை மேயர், பெருநகர சென்னை மாநகராட்சி, எஸ். அரவிந்த் ரமேஷ்,எம். எல். ஏ, ஏ.எம். வி.பிரபாகரர்ராஜா. எம். எல். ஏ, ஜெ. கருணாநிதி. எம்.எல். ஏ, சைதை . எஸ். குணசேகரன், க. தனசேகரன். த. செ. கு. உ. பாலவாக்கம்.சோமு, பாலவாக்கம். விசுவநாதன், பாலவாக்கம். மு.மனோகரன், வேளச்சேரி. எஸ். பாஸ்கர், வாசுகி பாண்டியன்,கோ.சு.மணி, கி. கண்ணன், மு.ராஜா, மின்னல். கந்தப்பன், உ. துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், பகுதி நிர்வாகிகள். வி . பி . ஜானகிராமன், சைதை.த.சம்பத், சைதை. ஆர்.ரமேஷ், கவிதா.கவுதமன், சைதை. சாதிக். ஆர். ராஜ்குமார், வட்டச் செயலாளர்கள். ந.தமிழரசு. அட்கோ.கமலநாதன், எம். நாகா, எஸ்.பி.கோதண்டன், தா. மோகன்குமார், நா. ராதாகிருஷ்ணன், எல். ஆரோக்கியராஜ், ஆ. வரதன், கோட்டூர்.க.மணி, கோட்டூர்.கோ.சண்முகம், நேருநகர். எஸ்.பாட்சா, எஸ். ஆர். செந்தில்,ஜம்பு. முருகன், இரா. செழியன், பூக்கடை. வெள்ளைச்சாமி, செல்வகுமார், ஆர்.கிருஷ்ணகுமார், நா. மணிகண்டன், கோட்டூர். பிரகாஷ், கோ. பாஸ்கரன், மாவட்ட பிரதிநிதிகள். வீ. மதிவாணன்,ஜி.கே.ராம சந்திரன், கு.புகழ்வேந்தன், பொன். ஜெய்சிங், சைதை. ஆர்.ரவி பால்கார்.ஏ.ரவி, ஜி.பாபு, த. மணி, ஆர்.எல். காந்தன், டி. வி. நரசிம்மன், வே.முருகன், எஸ். சேகர், என்.நந்தகோபால், ஏ. மஜீத்,எஸ். ராதாகிருஷ்ணன், இரா. சுதாபிரியன், எஸ். ஜெ. சலாம், ஜி. செல்வராஜ், வே.ரமேஷ்குமார், க.உமாபதி,பாரிநகர். சசி, எஸ். ஆர். சீனிவாசன்,ஜி. ஏழுமலை, கொடி.சுரேஷ், டி. கோபாலகிருஷ்ணன், எஸ்.முகமது அலி, யமஹா. ராஜேஷ். கே.விஜயகுமார், வி.வாசுதேவன், என். ரமேஷ், எஸ். கண்ணன்ப. எழிலரசன், ஆர்.பெருமாள், ஆர்.தாமோதரன், ப.சிவகுமார், எஸ்.சையத்ஜலால்(எ) ஜானி.எஸ்.சரத்குமார்.மு. கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ்.முருகன், சாந்தி சுந்தரம், ஆர் .வி.நகர். அ.அயாத் பாஷா, ஆ. சுப்பிரமணி, சி.டிகாசிநாதன், வி.சபரி, து.முரளி, எல் சந்திரன்,என். தீனதயாளன், ஏ.எஸ்.பழனி, சைதை. எம். எஸ். மணி, ஜிம்.க.பிரபு,கொடி. பாலா, சார்ப். சரவணன், பூ.பாஸ்கர், எஸ்.மல்லிகா,சி.மங்கையர்திலகம். இ.வ.ரகுபதி,மு. காத்தவராயன், ஆட்டோ. சேகர்,எம்.சுந்தரேசன், வி. ஆதிகேசவன்,த.சேகர், ஜி. நாகதேவி,கொடி.கே.பாரி, கே.வெங்கடேசன்,வி.வெங்கடேசன், ஜி.தங்கராஜ்,கே. மணிகண்டன், ஜோ.அந்தோணிடி.சரவணன், என். எஸ். கார்த்திக், த. வின்சென்ட்,

எஸ். அருண்குமார்.மூ. வினோத்கண்ணா, மூ.கௌதம் ஜி.ரஞ்சித், து.வடிவேலன்,உ. மகஷ், சேகர் நகர். ஆர்.ஞானவேல் எஸ். பி.தினேஷ், ம. திலீபன், அருண், எஸ் முருகன், ஆர். கண்ணன், ஜெ. தமிழ்ச்செல்வன், மற்றும என்.சண்முகம், ஆயில்.எம்.சரவணன். பா.மோ.கார்த்திக், மு. மூர்த்தி, கா.மூர்த்தி, து. மா.பொ.சி, அனைவரையும் வரவேற்கும். வெ. புருசோத்தமன். ஏ. கார்த்திகேயன் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பொன்னேரி நகர இளைஞரணி சார்பில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவி வழங்கும் விழா நகர இளைஞரணி அமைப்பாளர் மா.தீபன் ஏற்பாட்டில் பொன்னேரியில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் திமுக சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றி பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார் அருகில் பேச்சாளர்கள் நாகம்மை கருப்பையா, ஆஷிகா பர்வீன், கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, ஜி.ரவிக்குமார், பரிமளம்விஸ்வநாதன், கே.வி.லோகேஷ், மு.கதிரவன், பா.செ.குணசேகரன், கி.வே. ஆனந்த் குமார், ஆ.ராஜா, ஜெ.மோகன்பாபு, யுவராஜ், சங்கர், பா.து.தமிழரசன், எம்.டி.ஜி.கதிர்வேல், செங்கல்பவராயன், நீலகண்டன், பரிதா ஜெகன், ராமலிங்கம் வாசுதேவன் சந்திரா பிரகாஷ், நரேஷ் சதீஷ்குமார், கார்த்திக், ம.பிரதீப் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றியம் வெங்கத்தூர் ஊராட்சி மணவாளநகரில் திருவள்ளூர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 30 லட்சம் மதிப்பீட்டில் நவீன பேருந்து நிறுத்தம் திறப்பு விழா நடைபெற்றது இதில் திருவள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து பொதுமக்களுக்கு அரசுவை உணவு வழங்கினார் அருகில் அரசு போக்குவரத்து கழக கோட்ட மேலாளர் வெங்கடேசன் கிளை மேலாளர் பாஸ்கரன் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சௌந்தரி, செல்வி, நிர்வாகிகள் கே.திராவிடபக்தன், ஆர்.டி.இ.ஆதிசேசன், கே.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், பொன்.பாண்டியன், வி.எஸ்.நேதாஜி, பி.கே.நாகராஜ், என்.நந்தகோபால், மதியழகன், வி.ராஜசேகர், செங்குட்டுவன், சி.ஆர்.குமரன், டி.திலீப்குமார், ஆர்.மோகனசுந்தரம், காஞ்சிபடி பி.சரவணன், எஸ். கமலக்கண்ணன், பி.ஆர்.பிரபாகரன் , ராஜேந்திரகுமார், டில்லி, சங்கர், வாசு, சேகர், சத்யா, பெருமாள், பாலசுப்பிரமணியம் , சதீஷ், ராம்கி உள்பட பலர் உள்ளனர்

## அண்ணாநகர் தெற்கு பகுதி இளைஞர் அணி சார்பில்

# கலைஞர் பிறந்தநாள்: கழக அரசின் சாதனை விளக்க தெருமுனை கூட்டம்!

## தலைமை வி.ஸ்ரீதர்! முன்னிலை ப.பிரகாஷ், வி.எம்.சிவா, கே.குட்டி, த.வெற்றி! நே.சிற்றரசு, தயாநிதிமாறன், எம்.கே.மோகன், ந.இராமலிங்கம் பங்கேற்பு!

சென்னை,ஜூன்.27-

சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் தெற்கு பகுதி இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்காண்டு திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனை கூட்டம் இன்று (28-6-2025) சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு, அமைந்தகரை, பெருமாள் கோயில் தெருவில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு வி.ஸ்ரீதர் பகுதி துணை அமைப்பாளர் இளைஞர் அணி,

முன்னிலை : ப.பிரகாஷ் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், வி.எம்.சிவா 107அ வட்ட செயலாளர், கே.குட்டி மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர், த. வெற்றி இளைஞர் அணி பகுதி அமைப்பாளர்,

வரவேற்புரை: பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் : பி.சிவகுமார், எம்..சிவசிதம்பரம், மு.ஜெயராமன், கார்த்திக் மேகநாதன், சிறப்புரை: நே.சிற்றரசு எம்.சி. சென்னை மேற்கு மாவட்ட செயலாளர், தயாநிதிமாறன் எம்.பி., எம். கே.மோகன் எம்.எல்.ஏ., ந.இராமலிங்கம் எம்.சி. அண்ணாநகர் தெற்கு பகுதி செயலாளர், தலைமை கழக பேச்சாளர்கள்: பா.மீ.யாழினி, க.ஹேமநாதன், கார்த்திக் மோகன் மாநில தகவல் தொழில் நுட்ப அணி இணைசெயலாளர், எஸ்.ஜோயல் மாநில இளைஞர் அணி துணை செயலாளர், வட்ட செயலாளர்கள்: ந.அதியமான், இரா.பொன்னுரங்கம், ப.மகேஷ்ராஜா, இரா.நவிந்திர குமார், தெ.கருணாநிதி மற்றும் மாநில மாவட்ட, பகுதி வட்ட கழக நிர்வாகிகள், பாகமுகவர்கள், கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நன்றியுரை : S.கிஷோர்குமார், இளைஞர் அணி பகுதி துணை அமைப்பாளர், பி.சிலம்பரசன் இளைஞர் அணி வட்ட துணை அமைப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் நாடு போற்றும் நான்காம் ஆண்டு சாதனை விளக்கம் தெருமுனை கூட்டம் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆலோசனை படி ஒன்றிய கழகச் செயலாளர் டி.தேசிங்கு தலைமையில். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜி.பிரவீன் குமார் வரவேற்பில் நடைபெற்றது இதில் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, பேச்சாளர்கள் ஆடுதுறை உத்திராபதி யாசர் அரபத் ஆகியோர் திமுக அரசின் சாதனைகளை விளக்கி பேசினார்கள் உடன் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி. கருணாநிதி, அக்னி ராஜேஷ் ஏடி.பிரியா குமார், கந்தபாபு , சுமதி விஜயகுமார் , ஜெ.சாக்ரடீஸ், ஜி.சுகுமார், கட்டதொட்டி குணசேகரன், பா.கந்தன் , பி.சி. எம்.உதயா, ஹரிஹரசுதன், டி மணிவண்ணன், ராஜேஷ் , சிபி சக்கரவர்த்தி, கார்த்திகேயன், ஜி.பி. பரனிதரன், இ.வி.பி.பிரதீப், மு.தே.ராஜேஷ், பிரசாத், மோகன், பலராமன் வி.கே.வெங்கடேசன், உள்பட நிர்வாகிகள் பலர் உள்ளனர்